# ஓதலின் சிறந்தன்று ஒழுக்கமுடைமை!



மகேந்திரன்

தமிழ்த்துறை ஆசிரியர்,
பீஸ் ஆன்
கிரீன் எர்த்
பப்ளிக் பள்ளி,
குன்றத்தூர்.

**“ ஒழுக்கமில்லாத கல்வி என்பது உயிரில்லாத உடலைப் போன்றது. ஆகவே ஒழுக்கமே ஒருவரின் கல்வியை உயிர்ப்புடன் வைக்க உதவும் கருவி.**

பள்ளி மாணவர்களாகிய நீங்கள் பள்ளிப்பருவத்தில் கற்றுக்கொள்பவை தான் உங்களது வாழ்நாள் முழுதும் உடன் வரும். நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொண்டால் நல்லவையே உடன் வரும். கல்வி மட்டும் தான் ஒரு மனிதனை மேம்படுத்தும் கருவியாக அமைந்துள்ளது. அந்தக் கல்வி எப்படிபட்ட கல்வியாக அமைதல் வேண்டும் என்றால். ஒழுக்கம் கலந்து வரும் கல்வியாக இருக்கவேண்டும். கல்வியினால் கண்ட உயரமானது ஒழுக்கமில்லையென்றால் வெகுவிரைவில் கீழே வந்து விழும்.

கூர்மை இல்லாத கத்தி பயன்படாதது போல, ஒழுக்கமில்லாத கல்வியும் எங்கும் எந்தக் காலமும் பயன்படாமலே துருப்பிடித்துப் போகும்.

கல்வி என்பது மனிதவளத்தை மேம்படுத்துமேயானால், ஒழுக்கம் என்பது அந்த மேம்பாட்டை நிலைநிறுத்தும்.

ஒழுக்கமே ஒரு மனிதனைச் சிறப்புடையவனாக்கும். அந்த ஒழுக்கத்தைத் தனது உயிரினும் மேலானப்பொருளாகக் கருதிப் போற்றிக்காக்க வேண்டும்.

கடல் சூழ்ந்த இவ்வுலகில் வாழும் மக்களுகெல்லாம் கல்வியைக் காட்டிலும் நல் ஒழுக்கமுடைமையே சிறப்பைத் தரும் என்று முதுமொழிக்காஞ்சியில் மதுரை கூடலூர் கிழார் என்ற புலவர் கூறியுள்ளார்.

கற்றலை விடச் சிறப்பை வெகுவிரைவில் தேடித் தருவது ஒழுக்கமேயானாலும், இன்றைய சூழலில் மனிதர்களின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றோடு கல்வியும் ஒன்றெனக் கலந்துவிட்டது. எனவே, கல்வியோடு ஒழுக்கத்தையும் ஒருசேரக் கற்றலே சிறந்த கற்றல் முறையாகும்.

ஒழுக்கமில்லாத கல்வி என்பது உயிரில்லாத உடலைப் போன்றது. ஆகவே ஒழுக்கமே ஒருவரின் கல்வியை உயிர்ப்புடன் வைக்க உதவும் கருவி. தமிழ் அறநூல்களில் கல்வியைவிட ஒழுக்கத்தையே மேலாகப் பெரியோர் போற்றுகின்றனர். எனவே, மாணவர்கள் ஒழுக்கம் நிறைந்த கல்வியோடு நலமுடனும் வளமுடனும் கற்று வாழ்வில் சிறப்படைய வேண்டும். ●